# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

மானியக் கோரிக்கை எண் – 10 வணிகவரிகள்

மானியக் கோரிக்கை எண் – 11 முத்திரைத்தாள்கள்

மற்றும் பத்திரப்பதிவு

## அறிவிப்புகள்

2017 – 2018

# வணிகவரி மற்றும் பதிவுத் துறை

மானியக் கோரிக்கை எண் – 10

(வணிகவரிகள்)

மானியக் கோரிக்கை எண் – 11

(முத்திரைத்தாள்கள் மற்றும் பத்திரப்பதிவு)

அறிவிப்புகள்

2017 – 2018

கே.சி. வீரமணி
வணிகவரித் துறை அமைச்சர்

(C)
தமிழ்நாடு அரசு
2017

**1. திருப்பூர் மாவட்டம், அவிநாசியில் உள்ள உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்.**

**Construction of Building for the Office of the Assistant Commissioner (Commercial Taxes), Avinashi, Tiruppur District.**

வணிகவரித் துறையில், ஒவ்வொரு ஆண்டும், நிலம் பெறப்படுவதைப் பொறுத்து, போதுமான வசதியின்றி தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வணிக வரி அலுவலகங்களுக்கு படிப்படியாக அரசுக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அந்த வகையில், 2017–2018 ஆம் ஆண்டில், திருப்பூர் மாவட்டம் அவினாசியில் உள்ள உதவி ஆணையர் (வணிகவரி) அலுவலகத்திற்கு, **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, ரூ.88.51 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

2. **வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் உள்ள உதவி ஆணையர் (வணிகவரி), அலுவலகத்திற்கு சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல்.**

Carrying out maintenance works to the Office of the Assistant Commissioner (Commercial Taxes), Vaniyambadi, Vellore District.

வேலூர் மாவட்டம், வாணியம்பாடியில் உள்ள உதவி ஆணையர் (வணிகவரி), அலுவலக பராமரிப்பு பணிகள், பொதுப்பணித் துறையினரால் சிறிய அளவில் மட்டுமே மேற்கொள்ளப்பட்டுள்ளன. தற்பொழுது இக்கட்டடம் உடனடி பராமரிப்பு செய்ய வேண்டிய நிலையில் உள்ளதால், **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.32.77 இலட்சம் செலவில் சிறப்பு பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளப்படும்.

**3. திருநெல்வேலி ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் மின்தூக்கி வசதி செய்து கொடுத்தல்.**

Providing Lift facility in the Integrated Commercial Tax Building, Tirunelveli.

முதியோர் மற்றும் மாற்றுத் திறனாளிகள் உட்பட ஏறக்குறைய தினந்தோறும் 500 பேர் வருகை தரும் 10 வணிகவரி அலுவலகங்கள் இயங்கி வரும் திருநெல்வேலி, பாளையங்கோட்டை ஒருங்கிணைந்த வணிகவரி அலுவலகக் கட்டடத்தில் மின்தூக்கி வசதி இல்லை. எனவே, இக்கட்டடத்திற்கு **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி** ரூ.27.46 இலட்சம் மதிப்பீட்டில் மின்தூக்கி நிறுவப்படும்.

**4. பழைய வாகனங்களுக்குப் பதில் புதிதாக 10 புதிய பொலிரோ ஈப்புகள் வாங்குதல்.**

**Purchase of 10 new Bolero Jeeps in lieu of condemned vehicles.**

வணிக வரித் துறையின் செயல்பாடுகள் தடையில்லாமலும், வரிவசூல் சிறப்பாகவும் நடைபெறும் பொருட்டு இத்துறையில் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள பழைய வாகனங்களுக்குப் பதிலாக, இவ்வாண்டில் ரூ.**65.68** இலட்சம் செலவில் **10** புதிய வாகனங்கள் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, வாங்கப்படும்.

5. **வணிகவரித் துறையில் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள வரிகளை வசூலிக்க சமாதான் திட்டம் அறிமுகப்படுத்துதல்.**

**I**ntroduction of Samadhan Scheme to collect long pending arrears of Commercial Taxes.

**01.07.2017** முதல் சரக்குகள் மற்றும் சேவைகள் வரி என்ற புதிய வரிவிதிப்பு முறை அறிமுகப்படுத்தப் பட்டுள்ளதால், **30.06.2017** வரை தமிழ்நாடு மதிப்புக்கூட்டு வரிச் சட்டத்தின் கீழ் நீண்ட நாட்களாக நிலுவையில் உள்ள வரியை வசூலிக்க **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, சமாதான் திட்டம் கொண்டுவரப்படும்**.**

**6. விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூரில் வணிகவரி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுதல்.**

**Construction of Commercial Tax office building at Tirukovilur, Villupuram District**

வணிகவரித் துறையில், ஒவ்வொரு ஆண்டும், நிலம் பெறப்படுவதைப் பொறுத்து, போதுமான வசதியின்றி தனியார் வாடகைக் கட்டடங்களில் இயங்கி வரும் வணிக வரி அலுவலகங்களுக்கு படிப்படியாக அரசுக் கட்டடம் கட்டப்பட்டு வருகிறது. அந்த வகையில், 2017–2018 ஆம் ஆண்டில், விழுப்புரம் மாவட்டம், திருக்கோவிலூர் வணிகவரி அலுவலகத்திற்கு **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, ரூ.103.951 இலட்சம் செலவில் சொந்தக் கட்டடம் கட்டப்படும்.

7. **10 வணிகவரி அலுவலகக் கட்டடங்களில் CCTV கேமராக்கள் பொருத்துதல்.**

**Installation of CCTV Cameras in 10 Commercial Tax Office buildings.**

அதிக எண்ணிக்கையிலான வணிகர்கள் மற்றும் பணியாளர்கள் வருகை புரியும் வணிகவரித் துறை அலுவலகக் கட்டடங்களில் பாதுகாப்பு கருதி CCTV கேமராக்கள் பொருத்துவது மிகவும் அவசியமாகக் கருதப்படுகிறது. அதன்படி, வேலூர், விழுப்புரம், திருச்சிராப்பள்ளி, தஞ்சாவூர், சேலம், ஈரோடு, கோயம்புத்தூர், திருப்பூர், மதுரை மற்றும் திருநெல்வேலி வணிகவரித் துறை அரசுக் கட்டடங்களில், **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, ரூ.142.32 இலட்சம் செலவில் CCTV கேமராக்கள் பொருத்தப்படும்.

**8. பதிவுத்துறைக்கு புதியதாக 5 வாகனங்கள் வாங்குதல்.**

**Purchase of 5 new vehicles to Registration Department.**

பதிவுத்துறை அலுவலர்கள் நிலம் மற்றும் கட்டடங்களை ஆய்வு செய்வதுடன், துறையின் பல்வேறு அலுவலகங்களிலும் திடீராய்வு மேற்கொள்வதால் அவர்களுக்கு வாகனங்கள் வழங்க வேண்டியது அத்தியாவசியமாகும். 5 பழைய வாகனங்களை ஒப்படைவு செய்து அதற்கு பதிலாக 2017–18 ஆம் ஆண்டில் பதிவுத்துறை அலுவலர்களுக்கு **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, ரூ.42.5 இலட்சம் செலவில் 5 புதிய வாகனங்கள் வாங்கப்படும்.

**9. சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு 10 புதிய அரசு கட்டடங்கள் கட்டுதல்.**

**Construction of 10 new Buildings to the Sub-Registrar offices.**

பதிவுத் துறையின் அனைத்து அலுவலகங்களுக்கும் அரசு கட்டடம் கட்டப்பட வேண்டும் என்ற நோக்குடன் கடந்த 2011–12–ஆம் ஆண்டு முதல் புதிய அரசு கட்டடங்கள் கட்ட ஆண்டுதோறும் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு வருகிறது. அதன்படி 2011–2012ஆம் ஆண்டிலிருந்து 2016–2017 ஆம் ஆண்டுவரை 50 சார்பதிவாளர் அலுவலகங்களை உள்ளடக்கிய 25 ஒருங்கிணைந்த பதிவுத்துறை அலுவலகங்களும் தனித்தனியாக 167 சார்பதிவாளர் அலுவலகங்களுக்கு புதிய கட்டடங்கள் கட்ட ரூ.131.58 கோடி நிதி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு கட்டடங்களும் கட்டப்பட்டுள்ளன.

2017–18ஆம் ஆண்டில் **மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் நல்லாசியுடன், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி**, 10 சார்பதிவாளர் அலுவலகங்ளுக்கு ரூ.9.88 கோடி செலவில் புதிய அரசு கட்டடங்கள் கட்டப்படும்.

**கே.சி. வீரமணி**
**வணிகவரித் துறை அமைச்சர்**